**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-13/2021**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto complainant)**

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Age: | 40 |
| Father's name | தங்கப்பா | Calling: | விவசாயம் |
| Village | பன்னிரெண்டாம்பட்டி | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025

(1. 2 எதிரிகள் ஆஜர். ) ( 3. 4 ஆம் எதிரிகள் ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 3 வது எதிரி அஜீத், 4 வது எதிரி ராமராஜ் ஆகியோரை தெரியும். கடந்த 30.03.2023ம் தேதி மாலை சுமார் 06.45 மணியளவில், எனது வீட்டில்வாசலில் கடலை காயப்போட்டு கொண்டிருந்தேன். அப்போது மாரிமுத்துவின் ஆட்டுக்குட்டி கடலையை மேய்ந்து கொண்டிருந்தது. நான் மாரிமுத்துவிடம் ஆட்டுக்குட்டியை பிடித்து கட்டுமாறு சொன்னேன். அதற்கு அவர் அப்படி எல்லாம் கட்ட முடியாது தேவுடியா பயலே என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் எனது பின் தலையில் வெட்டினார். மாரிமுத்துவின் மகன் ஐயப்பன் கம்பால் எனது கீழ் வரிசை பற்களில் அடித்ததில், எனது கீழ் வரிசை பற்களில் ஒரு பல் உடைந்துவிட்டது. மற்றொரு பல் தற்போதும் ஆடிக்கொண்டிருக்கிறது. ஐயப்பன் கம்பால் அடித்ததில் எனது நாக்கின் நடுப்பகுதி பெயர்ந்துவிட்டது. அந்த பெயர்ந்த பகுதியை அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டது. பின்னர் அஜீத் குமார் கம்பால் எனது இடது தோள்பட்டை மற்றும் வலது தொடையில் அடித்தார். ராமராஜ் என்பவர் கம்பால் முதுகில் அடித்தார். எனது சத்தம் கேட்டு எனது தம்பி சுரேஷ் அங்கு வந்தார். அவரை மாரிமுத்து அருவாளால் வலது கையில் அடித்துவிட்டார். மாரிமுத்து என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன். துப்பாக்கியால் சுட்டுவிடுவேன். அவ்வாறு சுட்டுவிட்டால் ஒரே வழக்காக முடிந்துவிடும் என்று மிரட்டல்விடுத்தார். அவரிடம் துப்பாக்கி வைத்திருப்பதற்காக உரிமம் உள்ளது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எனது மாமா முருகேசன் சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார்**

**வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. CC.64/2024 என்ற வழக்கில் நானும், எனது சகோதரர் மற்றும் மூன்று நபர்கள் எதிரிகளாக ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான் . எதிரிகள் ராமராஜன், அஜீத், ஜயப்பன் ஆகியோரை சட்டவிரோத கும்பலாக ஒன்றுக்கூடி தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தாக மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், எதிரிகளும் ஒரே கிராமத்தை சேர்ந்த வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே ஆட்டுக்குட்டி கடலையை தின்றது தான் பிரச்சனை என்றால் சரிதான். வேறு எந்த முன்பகையும் இல்லை என்றால் சரிதான். ஆட்டுக்குட்டி கடலையை தின்ற இடம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதுதான் சம்பவம் இடம் என்றால் சரியல்ல, எனது வீட்டு கோடியில் சம்பவம் நடைபெற்றது. அந்த கோடி எனக்கு சொந்தமானது என்றாலும், அதற்கு அருகில் தான் எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் தெரியும். சம்வபம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான் மாலை 06.45 மணியாகும். எனது வீட்டு கோடிக்கு பக்கத்தில் மின் விளக்குகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, மின் விளக்கு இருக்கிறது. எனது முதல் விசாரணையில் நாக்கு பெயர்ந்து சிகிச்சை எடுத்ததாக புகார் வாக்குமூலம் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல , சொல்லியுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் எனது நாக்கில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால், நான் போலிசாரிடம் சொன்னேன். அதனால் நான் சொன்ன விசயத்தை போலிசார் பதிவு செய்யவில்லை என்றால், நான் சொன்ன மற்ற அனைத்து விவரங்களையும் பதிவு செய்துள்ளார்கள். நாக்கில் காயம் ஏற்பட்டது மட்டும் பதிவு செய்யவில்லை. நான் போலிசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும், மாரிமுத்து என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்றும், துப்பாக்கியால் சுட்டுவிடுவேன் என்றும், அவ்வாறு சுட்டுவிட்டால் ஒரே வழக்காக முடிந்துவிடும் என்று மிரட்டல்விடுத்தார் என்றும், அவரிடம் துப்பாக்கி வைத்திருப்பதற்காக உரிமம் உள்ளது என்றும், சொல்லவில்லை என்றால், துப்பாக்கி உரிமம் வைத்திருக்கிறார் என்பதை தவிர மற்ற விவரங்களை சொன்னேன்.

3. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்ட கையெழுத்து யாருடையது என்றால், நான் எழுதவில்லை நான் சொல்லச்சொல்ல எழுதிக் கொண்டார்கள். போலிசார்

விசாரணையில் என்னை மாமா முருகேசன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது, மருத்துவர் என்னை விசாரித்தார்கள் என்றாலும், நான் நடந்த விவரத்தை சொல்லேன் என்றால் சரிதான். விபத்துப் பதிவேட்டில் இரண்டு தெரிந்த நபர்கள் என்னை தாக்கியதாக நான் மருத்துவரிடம் சொன்னதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் , நான் அவ்வாறு சொல்லவில்லை. விபத்துப் பதிவேட்டில் சொல்லியுள்ள விவரங்கள் பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியதால் எனது பற்கள் உடையவில்லை என்றாலும், அதற்காக நான் சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நானும் எனது குடும்பத்தாரும், மூன்று எதிரிகளை தாக்கிய கொடுங்காயத்தை ஏற்படுத்தியதால், அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தததை தெரிந்த அந்த வழக்கிலிருந்த தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி சுரேஷ் எனது சகோதரர் என்றால் சரிதான். சாட்சிகள் நடராஜன், ராமலிங்கம் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல, பக்கத்து ஊர்காரர்கள் ஆவார்கள். எந்த தேதி, எந்த நேரத்தில், எந்த இடத்தில் என்ன பெயர் கொண்ட போலிசார் விசாரித்தார் என்றும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றால், மருத்துவமனையில் வைத்து 30.03.2021ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் விசாரித்தார்கள். விசாரித்த போலிசாரின் பெயர் தெரியவில்லை. அதன் பிறகு போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, மறுநாள் காலையில் விசாரித்தார்கள். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள உண்மைக்கு புறம்பானது மற்றும் தவறானது என்றாலும், எதிரிகள் எங்களை தாக்கவும் இல்லை கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-13/2021**

**List of Witness LW2 Examined as PW2 ( Eye Witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ் | Age: | 37 |
| Father's name | தங்கப்பா | Calling: | விவசாயம் |
| Village | பன்னிரெண்டாம்பட்டி | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025

(1. 2 எதிரிகள் ஆஜர். ) ( 3. 4 ஆம் எதிரிகள் ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 3வது எதிரி அஜீத், 4வது எதிரி ராமராஜ் ஆகியோரை தெரியும். கடந்த 30.03.2021ம் தேதி மாலை சுமார் 06.45 மணியளவில், எனது வீட்டில்வாசலில் நானும் எனது அண்ணனும் கடலை காயப்போட்டு கொண்டிருந்தோம். அப்போது மாரிமுத்துவின் ஆட்டுக்குட்டி கடலையை மேய்ந்து கொண்டிருந்தது. எனது அண்ணன் மாரிமுத்துவிடம் ஆட்டுக்குட்டியை பிடித்து கட்டுமாறு சொன்னார். அதற்கு அவர் அப்படி எல்லாம் கட்ட முடியாது அப்பதுதான் எனது ஆடு மேயும் தேவுடியா பயலே என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் எனது அண்ணன் பின் தலையில் வெட்டினார். நான் அதை தடுக்க சென்றபோது, மாரிமுத்து அருவாளை திருப்பு எனது வலது கையில் அடித்துவிட்டார். மாரிமுத்துவின் மகன் ஐயப்பன் பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து வந்து எனது அண்ணன் வாயில் குத்திவிட்டார். அதனால், எனது அண்ணனின் கீழ் வரிசை பற்களில் ஒரு பல் உடைந்துவிட்டது. மற்றொரு பல் தற்போதும் ஆடிக்கொண்டிருக்கிறது. பின்னர் மாரித்துவின் மகன் அஜீத் குமார் கம்பால் எனது அண்ணனின் இடது தோள்பட்டை மற்றும் வலது தொடையில் அடித்தார். அண்ணாதுரையின் மகன் ராமராஜ் என்பவர் எனது அண்ணனை கம்பால் முதுகில் அடித்துவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் ஓடிவிடு மீண்டும் ஊருக்குள் வந்தால் உன்னை கொன்றுவிடுவேன் என மிரட்டினார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எனது மாமா முருகேசன் சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தார். எனது அண்ணனுக்கு பற்களில் எற்பட்ட காயத்திற்கு மருத்துவர் ஆறுமுகம் என்பவரிடம் புதுக்கோடடையில் உள்ள SK மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். நான் ஆதனக்கோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன். போலிசார் என்னை காவல்நிலையத்தில்

உட்காரவைத்துவிட்டு என் மீது வழக்கு போட்டு, திருமயம் ஜெயிலுக்கு அழைத்து சென்றார்கள். எனக்கு கையில் காயம் இருந்தால், அங்கு எடுத்துக்கொள்ளவில்லை அதனால், 3 நாட்கள் என்னை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருந்தார்கள். அதன் பிறகு ஜெயிலுக்கு அனுப்பினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. அ.சா.1 எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரியல்ல, வீட்டின் வாசல் படியில் தான் இருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நான் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்தில் சம்பவத்தின்போது வீட்டின் உள்ளே இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வீட்டு வாசல் படியில் தான் இருந்தேன். நான் வீட்டு வாசல் படியில்இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால், நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். முழுவதுமாக தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தையும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எத்தனை நாட்கள் திருமயம் ஜெயிலில் இருந்தேன் என்றால், 7 நாட்கள் இருந்தேன். எதற்காக ஜெயிலில் இருந்தேன் என்றால் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது போலிசார் என்னை ஜெயிலில் அடைத்துவிட்டார்கள். நானும் எனது குடும்பத்தாரும், மூன்று எதிரிகளை தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதால் நான் சிறையில் அடைக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்திற்கு சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்பதை காட்டுவதற்கு மருத்துவ குறிப்புகள் எதையும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, போலிசாரிடம் சொன்னேன். எனக்கு காயம்பட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. எந்த தேதி, எந்த நேரத்தில், எந்த இடத்தில் என்ன பெயர் கொண்ட போலிசார் விசாரித்தார் என்றும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றால், 30.03.2021ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் ஊருக்கு வந்து ஆதனக்கோட்டை போலிசார் விசாரித்தார்கள். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள உண்மைக்கு புறம்பானது மற்றும் தவறானது என்றாலும், எதிரிகள் எங்களை தாக்கவும் இல்லை கொலைமிரட்டல்

விடுக்கவில்லை என்றாலும், அ.சா.1 எனது சகோதரர் என்பதால், அவருக்காக அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் மாலை 6.45 மணியாகும். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.